සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උෟණ උපයෝජිත රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development

| මගේ අංකය<br>**எனது இல**<br>My No | DSD/HO/05/MF/01/சுற்றறிக்கை | ඔබේ අංකය<br>**உமது இல**<br>Your No | | දිනය<br>**திகதி**<br>Date | 2020.09.02 |
|---|---|---|---|---|---|

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை இலக்கம் – 2020/10**

அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள்/வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும். சமுதாய அடிப்படை வங்கிச்சங்க நிறைவேற்று குழு / கட்டுப்பாட்டு சபை தலைவர்களுக்கும்.

**<u>Covid–19 வைரஸ் தொற்று நோயால் பாதிப்புக்குள்ளான சமுர்த்தி வங்கிகள்/ வங்கிச்சங்கங்களின் கடனாளிகள் தமது கடன்களை திருப்பி செலுத்துவதற்கான நிவாரணம் வழங்கல்.</u>**

01. Covid-19 வைரஸ் தொற்று நிலமையினை கட்டுப்படுத்தும் பொருட்டு பின்பற்றப்பட்ட தனிமைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் காரணமாக சமுர்த்தி வங்கி அங்கத்தவர்களின் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வாழ்வாதார செயற்பாடுகளில் சில கட்டுபாடுகள் காணப்பட்டமையினால் அவர்களின் வருமான வழிகள் சீர்குலைந்து வருமானத்தை இழந்தனர். இதன் விளைவாக சமுர்த்தி வங்கிகள்/ வங்கிச்சங்கங்களில் இருந்து அவர்கள் பெற்ற கடன்களின் தவணைகளை திருப்பி செலுத்துவதில் நிதிச் சிக்கல்கள் ஏற்பட்டன.

இது தொடர்பாக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் 72 வது முகாமைத்துவ சபையின் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 2020/72/3 இன் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் கீழ் வரும் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

02. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை இலக்கம் 2020/07 மற்றும் அதற்கு வழங்கப்பட்ட இணைப்புகள் என்பன இத்தால் ரத்துச் செய்யப்படுகிறது என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

03. சமுர்த்தி வங்கிச் சங்கத்தினூடாக செயற்படுத்தப்படும் “சமுர்த்தி இசுறு” கடன் திட்டம் உட்பட சமுர்த்தி வங்கியின் மூலம் வழங்கப்பட்ட சுய சக்தி கடன் தவிர வங்கி அங்கத்தவர்களின் பொருட்டு செயற்படுத்தப்படும் அனைத்து கடன்களும் கீழ் வரும் ஆலோசனைகளின் பிரகாரம் கடனை திருப்பி செலுத்துவதற்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. மேலும் சுய சக்தி கடன் தொடர்பாக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் 2020/09 இன் பந்தி இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

04. 2020.03.15 ஆம் திகதியில் அறவிட வேண்டிய கடன் மீதியினை உடைய, இச்சுற்றுநிருப ஆலோசனைகள் வழங்கப்படும் வரை மாதாந்த கடன் தவணையினை செலுத்தாத கடனாளிகளுக்கு கீழ் வரும் நிவாரணங்கள் வழங்கப்படும்.

I. 2020.03.15 ஆம் திகதியில் இருந்து 2020.09.14 ஆம் திகதி வரை 06 மாதங்களுக்கு வருமான நிலமை சீராகும் வரை சலுகை காலம் (Grace Period) வழங்கப்படும்.

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

II. மேற்படி சலுகைக் காலத்திற்குறிய செலுத்தப்படாமல் இருக்கும் மாதாந்த கடன் தவணைகளை மீளச்செலுத்த உயர்ந்த பட்சம் 06 மாதங்களை எதிர் காலத்தில் மேலதிக காலமாக வழங்கல். அதற்கமைய ஒப்பந்த காலத்தை நீடித்தல்.

III. சலுகைக் காலத்தினுள் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகைக்கு 4% வருடாந்த வட்டியினை மாத்திரம் அறவிடல்.

உதாரணம்:-

I. 2020.03.15 ஆம் திகதியில் கடனாளியின் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 8000/= எனின் 2020.09.14 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய வட்டி தொகையானது

$$= \frac{8000 \times 4 \times 184}{100 \times 365}$$

= ரூபா 161 /= ஆகும்

II. 2020.02.25 ஆம் தகதி முடிவில் கடன் தவணையினை செலுத்திய பின் கடனாளியின் அறவிடவேண்டிய மீதி ரூபா 10000/= , ஒப்பந்தம் செய்த வட்டி 12% எனின் இக்கடனாளி சலுகைக் காலத்தின் பின் 2020.10.25 ஆம் திகதியில் கடன் தவணையினை செலுத்த வரும் போது அறவிட வேண்டிய மொத்த வட்டி தொகை எவ்வளவு?

| | | |
|---|---|---|
| 2020.02.25 இல் இருந்து 2020.03.14 வரை 12% வட்டித் தொகை (18 நாட்கள்) | - ரூபா | 59.00 |
| 2020.03.15 இல் இருந்து 2020.09.14 வரை 4% சலுகை வட்டித் தொகை (184 நாட்கள்) | - ரூபா | 202.00 |
| 2020.09.15 இல் இருந்து 2020.10.25 வரை 12% வட்டித் தொகை (41 நாட்கள்) | - ரூபா | 135.00 |
| | ரூபா | 396.00 |

IV. வழங்கப்பட்ட சலுகைக்காலம் முடிவடைந்த பின் 2020.09.14 ஆம் திகதியில் கணிப்பிடப்படும் வட்டித் தொகையினை உயர்ந்த பட்சம் 06 மாதங்களுக்குள் மீளச் செலுத்தி முடிக்க இடமளிக்கப்படுகிறது. ஒரு கடனாளி கடனை செலுத்துவதற்கு மாதாந்தம் வழங்கும் தொகையில் முதலில் நிலுவைக் கடன் வட்டியினை கடனாளியின் விருப்பத்துடன் ஒரே தடவையில் அல்லது பகுதி பகுதியாக அறவீடு செய்துக்கொள்ள முடியும்.

V. சலுகைக் காலத்தினுள் 5% அபராத வட்டி அறவிடப்பட மாட்டாது.

VI. எவரேனும் ஒரு கடனாளி 2020.03.15 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய வட்டி தொகை இருப்பின் அதற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட வட்டி வீதத்திற்கு அமைய வட்டி கணிக்கப்படல் வேண்டும்.

VII. 2020.09.14 ஆம் திகதியில் சலுகைக் காலம் முடிவடைந்த பின்னர் ஆரம்பிக்கும் அடுத்த மாதத்தில் இருந்து கடன் தொகையினை செலுத்தி முடிக்கும் வரைக்கும் முன்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டி வீதம் நடைமுறை படுத்தப்படும்.

VIII. 2020.09.14 ஆம் திகதியின் பின்னர் 90 நாட்களுக்கு மேல் ஒரு தவணையினையோ அல்லது வட்டித் தொகையின் ஒரு பகுதியினையோ செலுத்துவதற்கு முன்வராத கடனாளிகள் இருப்பார்களாயின் அவர்களை வேண்டுமென்றே செலுத்தத் தவறிய கடனாளி என அடையாளம் கண்டு கடன் தொடர்பான சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டியுடன் பெற்றுக்கொள்ள வேண்டிய கடன் தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

IX. சலுகைக் காலத்தினுள் கடன் தகவல் பதிவேட்டில் பதிவுகளை மேற்கொள்ளாமல் இருத்தல் வேண்டும். இருந்தும் சலுகைக் காலத்தினுள் எவரேனும் கடனாளி ஒருவர் கடன் தவணையினை செலுத்தும் போது கடன் தகவல் பதிவேட்டில் பெற்றுக் கொள்ளவேண்டிய மற்றும் அறவீடு செய்த தொகையினை உரிய திகதியில் பதிவு செய்தல் வேண்டும்.

05. 2020.03.15 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய கடன் மீதியுள்ள கடனாளிகளில் வழமை போல் மாதாந்தம் தவணையினை செலுத்திக் கொண்டிருக்கும் அல்லது கடன் தொகையினை வைப்புக் கணக்கில் வைப்பு செய்துள்ள கடனாளிக்கு கீழ் குறிப்பிடப்படும் நிவாரணங்களை வழங்க முடியும்.

5.1 வருடாந்த வட்டி வீதம் 4% ஆகும். சலுகை வட்டி வீதத்தில் வட்டியினை கணிப்பீடு செய்யும் போது தற்போது கடன் தவணையினை செலுத்தியுள்ள கடனாளிக்கு அவர்களிடம் இருந்து அறவீடு செய்த வட்டி தொகை அதிகம் எனின் அவ்வதிகரித்த தொகையினை எதிர்கால வட்டி தொகையில் அல்லது கடன் தொகையில் இருந்து கழித்து அதனை சீர் செய்தல் வேண்டும். மேலும் அறவிட வேண்டிய தொகைகள் இருப்பின் அதனை கடனாளிக்கு தெரியப்படுத்தி அறவீடு செய்ய முடியும்.

5.2 சலுகைக் காலத்தினுள் தண்டப்பணம் அறவிடாதிருத்தல்.

5.3 2020.09.15இல் இருந்து ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டியினை அறவீடு செய்தல் வேண்டும். எதிர்காலத்தில் தவணைப்பணம் தாமதமாகும் எனில் தண்டப்பணம் அறவீடு செய்தல் வேண்டும்.

5.4 வைப்புக் கணக்கில் கடன் தவணையினை வைப்பு செய்திருப்பின் இவ் ஆலோசனைகளின் பிரகாரம் சலுகைக் கடன் வட்டி வீதத்திற்கு அமைய வட்டியினை கணிப்பீடு செய்து ஒரே தடவையில் கடன் வட்டியினை அறவிட்டுக்கொள்ள முடியும். மேலும் இக்கணக்கில் மீதி இருப்பின் கடன் தொகையின் பொருட்டு கழித்துக் கொள்ள முடியும்.

06. 2020.03.15 ஆம் திகதிக்கு முன்னர் காலங்கடந்த மற்றும் தவணை தவறிய நிலையில் இருந்த கடனாளிகளுக்கும் இச்சலுகையினை வழங்க முடியும். மீதமாகவுள்ள பெற்றுக்கொள்ள வேண்டிய கடன் தொகைக்கு சலுகை வட்டியினையும் வழங்கி ஒப்பந்த காலத்தினை நீடித்துக் கொள்ளவும் முடியும். இருந்தும் அறவிடமுடியாக் கடனாளியின் கோரிக்கையினை பெற்று ஒப்பந்த காலத்தை மாத்திரம் நீடித்து கடன் தவணையினை அறவிட்டுக்கொள்ள ஊக்கப்படுத்தல் வேண்டும்.

07. போக முடிவில் கடனை திருப்பி செலுத்த ஒப்புக்கொண்ட கடனாளிகளுக்கும் இச் சலுகையினை வழங்க முடியும் என்பதுடன் 2020.09.14 ஆம் திகதியின் பின்னர் 90 நாட்களுக்குள் கடனை திருப்பி செலுத்தி முடித்தல் வேண்டும்.

08. தன சவிய, தனாபிமானி ஆகிய கடன் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைக்கு 4% சலுகை வட்டியின் அடிப்படையில் சலுகைக்காலம் 06 மாதங்களுக்கு சமாந்தர முறையில் வட்டியினை கணிப்பீடு செய்தல் வேண்டும். அதன் பின்னர் ஒப்பந்தம் செய்துக்கொண்ட வட்டி வீதத்துக்கு அமைய வட்டி கணிப்பிடல் வேண்டும்.

09. இத் திட்டத்திற்கு உட்பட்டு சலுகைக் காலத்தை பெறவிரும்பும் கடனாளிகள் தமது கோரிக்கையினை முன்வைப்பதுடன் முதலில் இச்சுற்று நிருபத்தினை கட்டுப்பாட்டு சபை, நிறைவேற்று சபை என்பனவற்றில் முன் வைத்து அவர்களின் அனுமதியினை பெற்றே சலுகை வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் வேண்டும்.

10. வழங்கப்படும் சலுகைக் காலத்தினுள் (6 மாதங்கள்) பூரணமாக கடன் தொகையினை செலுத்தி முடித்த கடனாளிக்கு இந் நிவாரணங்கள் வழங்கப்படல் ஆகாது.

11. சலுகைக் காலத்தினுள் அறவீடு செய்யப்படும் வட்டித் தொகையினை ஆள்சார் பேரேட்டுத் தாளின் வேறு எனும் நிரலில் பதிவு செய்ய வேண்டும். கடன் வட்டியினை பகுதி பகுதியாக செலுத்தும் போது செலுத்தப்படும் ஒவ்வொரு வட்டி தொகைக்கும் பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. இவ் ஆலோசனைகளின் பிரகாரம் வழங்கப்படும் நிவாரண திட்டத்தின் படி கடனை திருப்பி செலுத்தாத சந்தர்பங்களில் 2020.12.31 ஆம் திகதியில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் அறவிடமுடியா கடன்களை அடையாளம் கண்டு அதற்கான ஒதுக்கீடுகளை மேற்க்கொள்ளல் வேண்டும்.

13. கடனாளி சலுகைக் காலத்தின் பின்னர் செலுத்த வேண்டிய கடன் தொகையினை செலுத்தி முடித்த பின் புதிய கடன்களை கோரும் பட்சத்தில் அதற்கான சந்தர்பங்கள் வழங்கப்படல் வேண்டும்.

14. 2020.03.15 ஆம் திகதியின் பின்னர் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் எதிர்காலத்தில் வழங்கப்படும் கடன்களுக்கும் தற்போது நடைமுறையில் இருக்கும் வருடாந்த கடன் வட்டி வீதம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

15. இச் சலலுகை திட்டத்தின் கீழ் பந்தி இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் கடனாளி தமது கடனை திருப்பி செலுத்த முன் வரும் போது அவரின் குழுவில் உள்ள ஏனைய அங்கத்தவர்கள் உரிய தகமைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் அவர்களுக்கான கடன்களையும் வழங்க முடியும்.

16. மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் போது சமுர்த்தி வங்கிகள்/ வங்கிச் சங்கங்களின் கடனாளிகளுக்கு தெளிவூட்டி, வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் இவ் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு மாவட்ட வங்கி விடயப் பொறுப்பு முகாமையாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலகின் உத்தியோகத்தர்கள் தமது பங்களிப்பினை தவறாது வழங்குதல் வேண்டும்.

ஆர்.பி.பீ.திலக்கசிரி
பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்**

1. செயலாளர்:- சமுர்த்தி,வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இரஜாங்க அமைச்சு -தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் / மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம் -தகவலுக்காக
3. பிரதம உள்ளக கணக்காய்வாளர், சமு.அபி.திணைக்களம் -தகவலுக்காக
4. பணிப்பாளர் - குறுநிதி, சமு.அபி.திணைக்களம் -உ.ந.பொருட்டு
5. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி திணைக்களம். -உ.ந.பொருட்டு
6. பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகம். -உ.ந.பொருட்டு
7. கிளைத்தலைவர்கள் , சமு.அபி.திணைக்களம். -உ.ந.பொருட்டு
8. பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர்கள், மாவட்ட செயலகம். -உ.ந.பொருட்டு

Translate By. I.Aliyar
District Director of samurdhi - Mannar